யாதும் ஊரே
யாவரும் கேளிர்
உலகத்தமிழர் பேரமைப்பு

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

தஞ்சாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

2009ஆம் ஆண்டு மே திங்கள் 17, 18, 19 ஆகிய நாட்களில் உலகத்தின் மூத்த மாந்தரினமான தமிழினத்தின் நீண்டநெடிய வரலாற்றில் என்றும் நிகழ்ந்திராத அவலம் நிகழ்ந்து ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன. வீரமே ஆரமாகவும் ஈகமே அணியாகவும் பூண்டு வரலாற்றில் தன்னிகரற்ற முத்திரை பொறித்த தமிழினம் இந்த அவலத்தின்போது கையறுநிலையில் அழுது புலம்பி நின்றது.

காலத்தை வென்ற செவ்விலக்கியங்களைப் படைத்து உலக இலக்கிய வரிசையில் முன்னிடம் பெற்று நிகரற்றுத் திகழ்ந்தனர் தமிழர்...

வடக்கே இமயம் முதல் தெற்கே ஈழம் வரையிலும் கிழக்கே கடல் கடந்த நாடுகளிலும் பகைவர் அஞ்சி ஒடுங்கும் வகையில் அடலேறுகளாகத் திகழ்ந்தனர் தமிழர்.

ஆனால் பெருமைக்குரிய தமிழினம் இன்று தலைதாழ்ந்து தேம்பிக் கிடக்கும் இழிநிலை உருவானது ஏன்? எதனால்?

தமிழர் வரலாற்றில் இதுவரை நடந்திராத வகையில் தமிழீழத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் 1,40,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

20 கல் தொலைவில் இக்கரையில் தமிழ்நாட்டில் ஏழரைக் கோடித் தமிழர்கள் வாழ்ந்தும்கூட அந்த இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இவ்வளவு பெருந்தொகையினரான தமிழர்கள் மிக அருகில் வாழ்கிறார்கள். அவர்கள் கொதித்தெழுந்தால் நம்முடைய நிலை என்னாகும் என்ற அச்சம் சிங்கள வெறியர்களுக்கு அறவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டு மொத்தத் தமிழகமும் கொதித்தெழுந்து போராடத் தவறியதன் விளைவே இதுவாகும்.

இந்தப் படுகொலைகளை இந்தியாவோ, உலக நாடுகளோ கண்டிக்க முன் வராத நிலையில் சிங்கள வெறியர்கள் மேலும் துணிவு பெற்று அடுத்தக்கட்ட அழிவில் ஈடுபட்டனர். நாகரிக நாடுகள் எதிலும் இதுவரை செய்யப்படாத கொடுஞ் செயல் ஒன்றினைத் துணிந்து செய்தார்கள். தமிழீழத்தில் நிறுவப்பட்டிருந்த **மாவீரர் நினைவு இல்லங்களை** அடியோடு தகர்த்து, கல்லறையில் துயின்ற மாவீரர்களின் எலும்புகளைக் கூட விடாமல் தோண்டி எடுத்து அழித்தனர் சிங்கள வெறியர்கள்.

தமிழீழப் பகுதியில் தமிழர்களின் அடையாளங்களே இல்லாமல் செய்யும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

சிங்கள வெறியர்களின் மேற்கண்ட செயல்கள் உலகத் தமிழர்களின் உள்ளங்களில் என்றும் ஆறாத புண்களாகின. இந்தப் புண்களை ஆற்றும் முயற்சியாக எழுந்ததுதான் **தஞ்சை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றமாகும்.**

தமிழீழத்தில் அழிக்கப்பட்டுவிட்டாலும் தமிழகத்திலேயாவது ஈழத்தமிழ் ஈகிகளின் நினைவுச் சின்னம் நிறுவப்பட வேண்டுமென **உலகத் தமிழர் பேரமைப்பு** முடிவு செய்தது.

முள்ளிவாய்க்கால் மக்கள் நினைவாகவும், ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளித்து தமது உயிர்களை ஈகம் செய்தவர்கள் நினைவாகவும், இரு **ஈகத் தூண்கள்** அமைப்பதென முதலில் முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க **02-06-2010** அன்று தஞ்சையில் இவற்றுக்கான அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது.

திரு. **பழ. நெடுமாறன்** அவர்கள் தலைமையில் முள்ளிவாய்க்கால் மக்கள் நினைவுத்தூணின் கால்கோள் விழாவை திரு.**வைகோ** அவர்கள் நாட்டினார். முனைவர் **ம.நடராசன்** தலைமையில் ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளித்த ஈகிகளுக்கான நினைவுத் தூணின் அடிக்கல்லை திரு. **இரா.நல்லகண்ணு** அவர்கள் நாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுத் தூண்களை நிறுவும் திட்டம் முனைவர் **ம.நடராசன்** மற்றும் கொடைத் தன்மை நிறைந்த பெருந்தகைகள் மூலம் நினைவு முற்றமாகப் பெரியதொரு வடிவம் எடுத்தது.

தமிழ்நாட்டிலும் தமிழீழத்திலும் காலூன்ற ஆங்கிலேய வல்லாதிக்கம் முயன்ற காலத்தில் அதை எதிர்த்துத் துணிவுடன் போராடி மாண்டு மறைந்த மாவீரர்கள், தமிழீழ விடுதலைப் போரில் களத்தில் புகழை நிலை நிறுத்தி மண்ணில் வீழ்ந்து பட்ட மாவீரர்கள், தமிழ்நாட்டில் மொழிகாக்கும் போரில் உயிர் ஈகம் செய்த மானமறவர்கள் மற்றும் ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளித்துத் தங்களை அழித்துக்கொண்ட ஈகிகள் ஆகிய அனைவரின் நினைவைப் போற்றும் வகையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் எழுப்பப்பட்டுள்ளது.

தமிழக – தமிழீழ வரலாற்றில் தம்முயிர் ஈந்து புகழுடம்பு எய்திய மாவீரர்களின் வண்ண ஓவியங்களைக் கொண்ட **மாவீரர் மண்டபம்** 2,600 சதுர அடிப் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

மறைந்த தமிழறிஞர்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் இசைவாணர்கள், நடிகர்கள், வடஎல்லை, தென்எல்லைப் போராட்டத் தளபதிகள், தமிழ்த்தொண்டு புரிந்த சான்றோர் ஆகியோரின் 235 உருவப்படங்களைத் தாங்கிய **முத்தமிழ் மண்டபம்** 3,200 சதுர அடிப் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலோ அல்லது உலகில் தமிழர் வாழும் நாடுகளிலோ இத்தனைத் தமிழ்ச்சான்றோரின் உருவப் படங்கள் ஒரே இடத்தில் அமைக்கப்படவில்லை.

**தமிழகத்தில் இதுவரை இத்தகைய சிற்ப–ஓவிய நினைவகம் அமைக்கப்பட்டதில்லை என்று சொல்லும் அளவிற்கு இந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் உருவாக்கப்பட்டுள்ளது.**

கடந்த 2010ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் நாள் சிற்பிகள் **முருகன், மெய்ம்மன்** ஆகியோர் தலைமையில் **ஓவியர் வீர. சந்தனம்** வரைந்த ஓவியங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டன. இந்தப் பணிகள் தொடங்கப்பட்டு மாமல்லபுரம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், புளியங்குடி, சங்கரன்கோவில், ஆந்திர மாநிலத்தின் குப்பம் ஆகிய இடங்களிலிருந்து வந்த நூற்றுக்கும் மேற்பட்ட சிற்பிகள் 1080



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்களுக்கு மேலாக அதாவது சுமார் மூன்றாண்டுக் காலமாக இரவு பகல் பாராமல் சிற்பங்களைச் செதுக்கும் பணியில் ஈடுபட்டு 2013ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் தேதி நிறைவு செய்தனர். கட்டடப் பணிகள் **பொறிஞர் ஜான் கென்னடி** தலைமையில் நடைபெற்றன. பின்னர் அதே ஆண்டு நவம்பர் 6ஆம் நாள் திறப்புவிழா நடைபெற்றது. இதைத் தொடர்ந்து நவம்பர் 8, 9 மற்றும் 10ஆம் நாள்களில் திறப்புவிழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. **தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத திருப்புமுனையை இந்நிகழ்ச்சிகள் ஏற்படுத்தின.**

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்கும், முத்துக்குமார் உட்பட 20 ஈகிகளுக்கும் கையில் விளக்கு ஏந்திய **தமிழ்ப்பாவை** அஞ்சலி செலுத்துவது போன்று அமைக்கப்பட்டுள்ள சிற்பம் மிகப்பெரியது.

60 கல்(டன்) எடைக்கு மேல் உள்ள ஒரே கல்லில் அற்புதமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பம் 15 அடி உயரம் உள்ள எழில்மிக்க மேடையில் தூக்கி வைக்கப்பட்டுத் தொலைவில் உள்ள வர்களையும் கவர்ந்து ஈர்க்கிறது.

பற்றி எரியும் நெருப்பில் கருகிய முத்துக்குமார் உட்பட 20 தமிழர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிற்பம் 55 அடி நீளமும் 10 அடி உயரமும் கொண்டதாகும். 3 அடி உயரம் உள்ள கருங்கல் மேடை மீது இந்தச் சிற்பம் தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது.

காண்போர் மனம் நெகிழும் வகையில் முள்ளிவாய்க்கால் அவலக் காட்சிகளை உயிரோட்டத்துடன் விளக்கும் சிற்பம் 55 அடி நீளமும் 10 அடி உயரமும் உள்ளதாகும். 3 அடி உயரம் உள்ள கருங்கல் மேடை மீது இந்தச் சிற்பம் தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது.

காண்போரின் கண்களைக் குளமாக்கும் வகையில் இந்த ஒப்பற்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

களத்தில் வீரத்தை நிலைநிறுத்தி மாண்ட தமிழர்களுக்கான **நெடுங்கல்** ஒன்று தனியான மேடையின் மீது நாட்டப்பட்டுள்ளது.

**வளாகம் முழுவதிலும் எழில் பூத்துக்குலுங்கும் பூங்காவும் மனத்தைக் கவரும் நீரூற்றுகளும், வண்ண மீன்கள் நீந்தி குழந்தைகளை மகிழ்விக்கும் சிறு குளமும், விளையாடி மகிழ பாலச்சந்திரன் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நேரத்திலும் சிற்பங்களையும் ஓவியங்களையும் காண்பதற்கு ஒளிவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

உலகமெலாம் உள்ள தமிழர்கள் வந்து வழிபடும் புனித இடமாக இந்த கலைக்கோவில் உருவாகியுள்ளது. உலகத் தமிழர்கள் பலரும், தமிழகத் தமிழர்களும் வாரி வழங்கிய நிதியின் உதவிகொண்டு இந்த முற்றம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு மேலும் அழியாமல் நின்று முள்ளிவாய்க்கால் மக்களின் அவலத்தையும் **முத்துக்குமார்** போன்ற ஈகிகளின் உன்னத ஈகத்தையும் வருங்காலத் தலைமுறையினருக்கு நினைவுப்படுத்திக் கொண்டே இருக்கக்கூடிய இந்த நினைவு முற்றத்தைத் தமிழகத்தின் தலைசிறந்த சிற்பிகள், ஓவியர்கள், கட்டடக் கலைஞர்கள் ஆகியோர் உருவாக்கித் தந்துள்ளனர். தமிழ்கூறும் நல்லுலகிற்கு அவர்கள் அளித்துள்ள உன்னதப் படைப்பாகும் இது.

**தஞ்சையில் இராசராசப் பெருமன்னன் எழுப்பிய கற்கோவில் அவன் பெற்ற வெற்றிகளின் பெருமித வடிவமாகும். அதே தஞ்சையில் இன்று எழுந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் தமிழர் வரலாற்றில் நிகழ்ந்த மறக்க முடியாத அவலத்தின் அடையாளமாகும்.**

காலம் காலமாக தமிழர்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டிய நினைவுச் சின்னமாக இந்த முற்றம் திகழ்கிறது.

இங்கு குறும்படங்களைத் திரையிட்டுக் காணலாம். மேலும் இயல் இசை அரங்குகள் நடத்த மேடையும் உள்ளது.

## இசை, நடனம், ஓவியம் – இலவயப் பயிற்சி

இசை, நடனம், ஓவிய வகுப்புகள் தக்க ஆசிரியர்கள் மூலம் குழந்தைகளுக்காக கிழமை(வாரம்)தோறும் காரி (சனி), ஞாயிறு ஆகிய நாள்களில் இலவயமாக நடத்தப்படுகின்றன. மூன்றாண்டு பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## ஓகம் (யோகா)

அகவை (வயது) வந்த ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் கிழமை(வாரம்)தோறும் ஞாயிற்றுக்கிழமையில் இலவய யோகா வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால் இலக்கிய முற்றம்

தக்க தமிழறிஞர்கள், தமிழ்த் தொண்டர்கள் ஆகியோரைக் கொண்ட முள்ளிவாய்க்கால் இலக்கிய முற்றம் செயல்படுகிறது. இலக்கியக் கருத்தரங்குகள், கலை விழாக்கள், குழந்தைகளுக்கான போட்டிகள் ஆகியவை மாதந்தோறும் நடத்தப்படுகின்றன.

## இலவய மருத்துவ முகாம்கள்

இயற்கை மற்றும் சித்த மருத்துவம், பொன்னூசி (அக்குபஞ்சர்) மருத்துவம், கண், பல் மருத்துவம் ஆகியவற்றுக்கான இலவய மருத்துவ முகாம்கள் சில மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் ஈகிகளின் நினைவிடம் மட்டுமன்று, தமிழர்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கும் நிறுவனமாகவும், மக்களுக்கு மருத்துவத் தொண்டாற்றும் அறநிலையமாகவும் திகழ்கிறது, ஒப்புயர்வற்ற இந்தக் கலைக்கோயிலைக் காலங்காலமாகத் தொடர்ந்து பேணிக் காக்க வேண்டிய கடமை உலகத் தமிழர்களுக்குண்டு. அக்கடமையை நிறைவேற்ற மனமுவந்து உதவுமாறு உலகத் தமிழர்களை உரிமையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

### முற்றம் காக்க நன்கொடையளிப்பீர்!

வங்கிக் கணக்கு விபரம் :
(80G ன்படி வருமானவரி விலக்கு உண்டு)

WORLD TAMIL CONFEDERATION TRUST
A/c. No. 921470527
SWIFT CODE : IDIBINBBMYL    IFS. Code : IDIB000M047
INDIAN BANK, MYLAPORE BRANCH, CHENNAI - 600 004.

WORLD TAMIL CONFEDERATION
A/c. No. 457022479
SWIFT CODE : IDIBINBBMYL    IFS. CODE : IDIB000M047
INDIAN BANK, MYLAPORE BRANCH, CHENNAI - 600 004.

**முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்,**
விளார் சாலை, தஞ்சாவூர்–613006. தொலைபேசி : 04362–255044
E-mail : thanjaimutram@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்,**

விளார் சாலை, தஞ்சாவூர்–613006. தொலைபேசி : 04362–255044

E-mail : thanjaimutram@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org